**சுருக்கம்**

கலையும் பண்பாடும் – தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மையம் – நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழியில் தமிழிசை மூவர் விழா நடத்துதல் – ரூ. 3,00,000/– நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2) துறை**

அரசாணை (ப) எண்.54

நாள்: 08–05–2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி வருடம், சித்திரை 25

**படிக்கப்பட்டது**

கலை பண்பாட்டுத் துறை ஆணையர் கடித ந.க.எண். 934/இ1/2018, நாள் 22.02.2019 மற்றும் 18.03.2019

*****

**ஆணை:–**

நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழியில் வாழ்ந்து தமிழிசை வளர்ச்சியில் முன்னவர்களாக விளங்கிய தமிழிசை மூவர் என அழைக்கப்பட்ட அருணாச்சலக் கவிராயர், முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை ஆகியோர் இயற்றியுள்ள கீர்த்தனைகள் தமிழிசை உலகில் மிகவும் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. தமிழிசை மூவரின் நினைவைப் போற்றும் வகையில் கலை பண்பாட்டுத் துறை சார்பில் ஆண்டுதோறும் தமிழிசை மூவர் விழா சிறப்பாக நடத்தப்படுகிறது.

2. நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் 27.02.2019, 28.02.2019 மற்றும் 01.03.2019 ஆகிய மூன்று நாட்களில் நடைபெற்ற தமிழிசை மூவர் விழாவிற்கு கீழே அட்டவணையில் தெரிவிக்கப் பட்டுள்ளவாறு ஏற்பட்ட உள்ளபடியான செலவினத் தொகையான ரூ.6,40,000/–இல் தஞ்சாவூர் தென்னகப் பண்பாட்டு மையத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.2.50 இலட்சம் போக எஞ்சியுள்ள தொகையான ரூ.3.90 இலட்சத்தில், “2205 00 102 JA 0933” என்ற கணக்குத் தலைப்பின் கீழ் ரூ.3.00 இலட்சமும், “2205 00 101 AC 0896” என்ற கணக்குத் தலைப்பின் கீழ் ரூ.90,000/–மும் நிதி ஒப்பளிப்பு செய்து உரிய அரசாணை வழங்குமாறு கலை பண்பாட்டு ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்:-

| வ. எண். | செலவின விவரம் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | மூவர் பட ஊர்வலம், அலங்காரம் | 4,900/– |
| 2 | ஒலி, ஒளி அமைப்பு சீரியல் பல்புகள், ஹாலஜன் விளக்குகள், குழல்விளக்குகள் ஆகியவற்றிற்கான வாடகை, வண்டி வாடகை உட்பட | 40,000/– |
| 3. | மூவர் இசை விழாவிற்கு வருகை தந்த இசைப்பள்ளி மாணவர்கள் தங்குவதற்கு திருமண மண்டப வாடகை | 63,000/– |

| | | |
|---|---|---|
| 4. | இசை நிகழ்ச்சி நிகழ்த்துவதற்கு வருகை தந்த கலைஞர்களுக்கு தங்குமிடம் ஏற்பாடு செய்து கொடுத்த செலவினம் | 17,855/– |
| 5 | கலைஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் தங்குமிடம் செலவினம் | 15,500/– |
| 6 | கலைஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், உணவுச் செலவினம் 300 நபர்களுக்கு சாப்பாடு | 1,40,000/– |
| 7 | அழைப்பிதழ், துண்டு பிரசுரங்கள், சான்றிதழ்கள் செலவினம் | 10,000/– |
| 8 | விளம்பரம், (பதாகைகள், ஆட்டோ விளம்பர அறிவிப்பு) | 13,000/– |
| 9 | நினைவுப் பரிசுகள், பொன்னாடைகள் | 5,000/– |
| 10 | புகைப்படம் | 10,000/– |
| 11 | வரவேற்பு செலவினம் | 2,540/– |
| 12 | தமிழிசை மூவர் விழா மேடை அலங்காரம், பிளாஸ்டிக் நாற்காலிகள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் நாற்காலிகள் வாடகை உள்பட | 20,000/– |
| 13 | மாவட்ட அரசு இசைப்பள்ளி மாணவர்களின் போக்குவரத்துச் செலவினம் | 43,205/– |
| 14 | மூவர் படம் வரைந்து பிரேம் போட்டது | 5,000/– |
| 15 | கலைஞர்களின் மதிப்பூதியம் | 2,50,000/– |
| | **மொத்தம்** | **6,40,000/–** |

3. கலை பண்பாட்டு ஆணையரின் கருத்துருவினை ஆய்வு செய்து, கலை பண்பாட்டுத் துறையின் தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மையம் மூலம் நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் 27.02.2019, 28.02.2019 மற்றும் 01.03.2019 ஆகிய மூன்று நாட்களில் நடைபெற்ற தமிழிசை மூவர் விழாவிற்கு ஏற்பட்ட உள்ளபடியான செலவினத் தொகையான ரூ.6,40,000/–இல் கலை பண்பாட்டுத் துறை சார்பில் ரூ. 3,00,000/– (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) தொகைக்கு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:–

> "2205 00 கலையும் பண்பாடும் – 102 கலை மற்றும் பண்பாட்டை வளர்த்தல் – மாநிலச் செலவினங்கள் – JA கலைப் பணிகளுக்கான ஒரு மொத்த நிதி ஒதுக்கம் – 309. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை".
>
> (த.தொ.கு.2205 00 102 JA 30903)

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்க கலை பண்பாட்டு ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

6. தமிழிசையில் மூவரில் மூத்தவரும், கீர்த்தனை இலக்கியத்தின் தந்தை எனப் போற்றப்படும் "முத்துத்தாண்டவர்" முக்தி அடைந்த நாள் ஆவணி பூச நட்சத்திரம் என "தென்னக இசையியல்" நூலில் குறிப்பிட்டுள்ளதை உறுதி செய்து கொண்டு, தமிழிசையினை தமிழகத்தின் அனைத்து இடங்களிலும் பரப்பிடும் வகையில், அந்நாளில் சீர்காழி மூவர் விழாவினை அனைத்து மண்டலக் கலை பண்பாட்டு மையங்களின் வாயிலாக அரசு இசைக்கல்லூரி, மாவட்ட அரசு இசைப்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் சிறந்த இசைக்கலைஞர்களைக் கொண்டு தமிழகத்தின் அனைத்து இடங்களிலும் ஆண்டுதோறும் சிறப்பாக நடத்திடக் கருதிப் பார்க்குமாறு கலை பண்பாட்டு ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. ஆண்டுதோறும் வரவு–செலவு திட்டத்தில் கலைப்பணித் திட்டங்களுக்கென "2205 00 102 JA 30903" என்ற கணக்குத் தலைப்பின் கீழ் ஒருமொத்த நிதியொதுக்கமாக ஒதுக்கீடு செய்யப்படுகின்ற சூழ்நிலையில், இனிவரும் காலங்களில் இத்திட்டத்திற்கென மேற்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் மட்டுமே நிதி ஒப்பளிப்பு செய்யப்பட வேண்டும் என கலை பண்பாட்டு ஆணையருக்கு அறிவிறுத்தப்படுகிறது.

8. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சாரா எண். 17291/ நிதி(கல்வி–II)துறை / 2019, நாள்.06.05.2019–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வ வர்மா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், கலை பண்பாட்டுத் துறை, சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9. (இருபடிகள்)
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (A&E), சென்னை–18.
உள்ளுரை தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வுத் தலைவர்
(பொது மற்றும் சமூக பகுதி) அலுவலகம், சென்னை–9.
✓ இணை இயக்குநர், மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர்

<u>நகல்:-</u>
நிதி(கல்வி–II)த் துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை – 9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(பண்–1/பொது) துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

08.05.19

பிரிவு அலுவலர்

8.5.19